# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).
************

மனு எண்: 441/2017/ஊராட்சி

ஆணை எண்: 094/2017

நாள்: 04 /05/2017

G. செல்வன்,
G. மோகன் காந்தி,
சவுண்டம்மன் கோவில் தெரு,
O. சேடர்பாளையம் ஊராட்சி
பொது மக்கள் சார்பாக, – மனுதாரர்கள்

1. ஊராட்சி செயலாளர்,
சேடர்பாளையம் ஊராட்சி, – எதிர் மனுதாரர்கள்

2. தனி அதிகாரி,
சேடர்பாளையம் ஊராட்சி,
ராசிபுரம் தாலுகா.

## ஆணை

நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் தாலுகா O. சேடர்பாளையம் ஊராட்சியில் வசிக்கும் பொது மக்கள் சார்பாக திருவாளர்கள் G. செல்வன் மற்றும் G. மோகன்காந்தி என்பவர்கள், அவர்களுடைய 27.3.2017 நாளிட்ட மனுவில் O.சேடர் பாளையம் கிராமத்தில் ஒரு குடம் தண்ணீர் ரூ.7/-க்கு வாங்கி வருவதாகவும் அவர்கள் அனைவரும் கூலி வேலை செய்பவர்கள் என்றும், ஏற்கனவே ஊரிலுள்ள ஆழ்துளை கிணற்றில் தண்ணீர் உள்ளது என்றும், ஆனால் அதிலிருந்து மோட்டார்

வைத்து இயக்க செய்ய ஊராட்சி செயலாளர் மற்றும் தனி அலுவலர் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் அலட்சியம் காட்டுகிறார்கள் என்றும், குடிநீரை விற்கும் தனி நபர்களிடம் ரகசிய ஒப்பந்தம் செய்துகொண்டு மக்களின் கோரிக்கையின் மீது நடவடிக்கை எடுக்காமல் இருக்கும் இவர்கள் மீது தக்க நடவடிக்கை மேற்கொண்டு ஊர் மக்களை காப்பாற்றுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

2. 2014 – ம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2, உட்பிரிவு (7) ன்படி, "உள்ளாட்சி அமைப்பு"என்பதற்கான பொருளில் "ஊராட்சி மன்றம்" மற்றும் "ஊராட்சி ஒன்றியம்" என்ற அமைப்புகள் வரையறுக்கப்படவில்லை. எனவே, மனுதாரர்கள் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால், எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாது. எனவே, இம்மனுவினை மாவட்ட ஆட்சித் தலைவர், நாமக்கல் மாவட்டம் அவர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக மேலனுப்ப முடிவு செய்யப்பட்டு, அவ்வாறே அனுப்பப்படுகிறது. மேலும் இப்பொருள் குறித்து நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகுமாறு மனுதாரர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு மே திங்கள் 4-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

—//ஒப்பம்//—
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.
25.5.17

பெறுநர்

1. திரு. G. செல்வன்,
   த/பெ.கோவிந்தராசு,

2. திரு. G. மோகன் காந்தி,
   சவுண்டம்மன் கோவில் தெரு,
   O. சேடர்பாளையம் ஊராட்சி Po.
   ராசிபுரம் தாலுக்கா, நாமக்கல் மாவட்டம் - 637 406.

நகல்:
மாவட்ட ஆட்சித் தலைவர்,
நாமக்கல் மாவட்டம்,